வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3516/ஆ4/ 2024. நாள். 29.01.2025

பொருள் தேர்வுகள்–வேலூர் மாவட்டம்– மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள். மார்ச்–2025 மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்களுக்கு தேர்வின் போது சலுகைகள் வழங்க ஆணை பெறப்பட்டது – பள்ளிகளுக்கு தெரிவித்தல் –தொடர்பாக

பார்வை 1. அரசாணை (நிலை) எண்.54. பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள்.29.02.2016
2. அரசாணை (நிலை) எண்.62. பள்ளிக் கல்வி (அ.தே) துறை, நாள்.25.03.2022
3.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 16.10.2024
4.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 016905/எச்1/ 2024 நாள் 27.01.2025

வேலூர் மாவட்டம், மார்ச்–2025, நடைபெறவிருக்கும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு சம்பந்தமாக மாற்றுத்திறன் கொண்ட பள்ளி மாணவர்களுக்கு தேர்வின் போது சலுகைகள் வழங்கும் பொருட்டு, பார்வை 2–ல் உள்ள அரசாணையினைப் பின்பற்றி தேர்வர்களுக்குள்ள உடற்குறைபாட்டின் அடிப்படையில் சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் தேர்வெழுத அனுமதி, மொழிப்பாட விலக்கு உள்ளிட்ட சலுகைகள் வழங்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பார்வை 3–ன் படி கடிதம் வாயிலாக பள்ளிகளிலிருந்து பட்டியல் பெறப்பட்டு அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டது.

மேலும் பார்வை 4–ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி மேல்நிலை இரண்டாமாண்டு சலுகை கோரும் தேர்வர்களின் விவரம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**எனவே மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மேல்நிலை இரண்டாமாண்டு சலுகை கோரும் தேர்வர்களின் விவரங்களை சரிபார்த்து மாணவர்களின் விவரங்கள் விடுபட்டு இருப்பின் உடன் 31.01.2025 –க்குள்** மாற்றுத்திறனாளி மாணவர்களிடம் இருந்து பூர்த்தி செய்யப்பட விண்ணப்பபடிவம் (படிவம் –1) , மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை நகல் அல்லது மருத்துவக்குழுவின் பரிந்துரைக் கடிதம், மாணவர்,மாணவர் பெற்றோர், மற்றும் வகுப்பாசிரியர் கடிதம் மற்றும் படிவம் –2 பூர்த்தி செய்து இரண்டு பிரதிகளில் சமர்பிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்,
அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் ,வே.மா.
நகல் ,

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் ) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.